UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2017

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2017 டிசெம்பர்

**TAMIL I / தமிழ் I - ( TG I)**

## தமிழ் மொழி வரலாறும் இலக்கண மரபுகளும்

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

(மூன்று மணித்தியாலம்)

---

### பகுதி 1

1. தமிழ்மொழி வரலாற்றை அறிவதற்கான மூலாதாரங்களைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

2. ஒலிமாற்றம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, தமிழ்மொழியின் ஒலியமைப்பில் காலம்தோறும் ஏற்பட்டுவந்த மாற்றங்களை வகைப்படுத்தி விளக்குக.

3. தமிழில் வினைச் சொற்கள் காலம் காட்டுவதில் காலம்தோறும் ஏற்பட்டுவந்த மாற்றங்களை உதாரணம் தந்து விளக்குக.

4. தனித்தமிழ் இயக்கம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, தற்காலத் தமிழில் தனித்தமிழ் இயக்கத்தின் செல்வாக்கை மதிப்பிடுக.

ம.ப.பா.

## பகுதி 11

5. ஐந்திலக்கண மரபு என்றால் என்ன? தமிழ் இலக்கண நூல்கள் ஐந்திலக்கண மரபை எவ்வாறு பின்பற்றியுள்ளன என்பதை ஆராய்க.

6. தமிழ் இலக்கண மரபில் தொல்காப்பியம் பெறும் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.

7. தமிழ் இலக்கண மரபில் ஐம்பால் பாகுபாட்டின் அடிப்படையைத் தெளிவுபடுத்தி, தற்காலத் தமிழைப் பொறுத்தவரை ஐம்பால் பாகுபாடு பொருந்துமா என்பதை ஆராய்க.

8. தமிழ் இலக்கண வளர்ச்சிக்கு ஐரோப்பிய பதிரிமார் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2017
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2017 டிசெம்பர்

**TAMIL - II / தமிழ் - II ( TG - II)**

குறிப்பிட்ட பாட நூல்கள்

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

முதலாம் பகுதியிலுள்ள வினாவுக்கும் இரண்டாம் பகுதியிலுள்ள

எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக

எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

## பகுதி I

01. மேல்வரும் பாடல்களின் சிறப்பினை விளக்குக.

(அ) முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவழி
விரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பின்
பரல்அவல்அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குகளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் டோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது — ம.ப.பா

நெடும் பெருங் குன்றத்த மன்ற காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே.

(ஆ) வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறாஅது
இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப,
ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைக்
கடந்துஅடு தானைச் சேர லாதனை

யாங்கனம் ஒத்தியோ! வீங்குசெலல் மண்டிலம்
பொழுது என வரைதி, புறங்கொடுத்து இறத்தி;
மாறிவருதி; மலை மறைந்து ஒளித்தி;
அகல்இரு விசும்பி னானும்
பகல்விளங் குதியால், பல்கதிர் விரித்தே!

## பகுதி II

02. தலைமகன்-தலைமகள் ஆகியோரிடையேயான அன்பின் பிணைப்பை அகநானூற்றுப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு விபரிக்குக.

03. அரசர்களது போர் ஒழுக்கச் சித்திரிப்பில் பாடாண்திணைப் பாடல்கள் பெறும் இடத்தை புறநானூற்றுப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

04. மன்னனை மையமாகக்கொண்டு திருவள்ளுவர் குறிப்பிடும் அரசியல் கருத்துக்கள் பற்றி ஆராய்க.

ம.ப.பா.

05. ‘தமிழில் பக்திக்கவிதை மரபின் புதிய திசைகளை ஆண்டாள் பாசுரங்களில் அறியலாம்’ - இக்கூற்றினைத் தெளிவுறுத்துக.

06. வன்தொண்டினாலும் இறைவனின் அருளைப் பெறலாம் என்பதைக் கண்ணப்ப நாயனார் புராணம் தெளிவுறுத்துமாற்றை விபரிக்குக.

07. ஆங்கிலேயர் காலத் தமிழ்நாட்டின் வரலாற்றை பாரதியின் சுயசரிதை மூலமாகக் கண்டு கொள்ளலாம். - அலசுக

**அல்லது**

இசை மீதான பாரதியின் ஈடுபாட்டை குயில்பாட்டில் புலப்படுத்துமாற்றை விளக்குக.

08. இலங்கையர்கோனின் சிறுகதைகளில் கிராமியம் சார்ந்த சமுதாயச் சித்திரிப்பு வெளிப்படுமாற்றை விளக்குக.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2017
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2017 டிசெம்பர்

**TAMIL - III / தமிழ் - III ( TG III)**

## சோழர்காலம் முதல் நவீனகாலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக் கோட்பாடுகளும்

இவ்வினாப் பத்திரத்தில் எல்லாமாகப் **பத்து** (10) வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(நேரம் : மூன்று மணித்தியாலம்)**

---

## பகுதி I

01. தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தவரையில், சோழர்காலத்தைப் 'பல்துறைச் சங்கம வளர்ச்சிக்காலம்' என்று குறிப்பிடலாமா? கருத்துரை வழங்குக.

02. தமிழ்ச் சிற்றிலக்கிய வளர்ச்சியில் விஜயநகர நாயக்கர் காலத்தின் பங்களிப்பினை விளக்குக.

03. தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்கில் ஐரோப்பியர் காலம் பெறும் முக்கியத்துவத்தினைத் தெளிவுறுத்துக.

04. தமிழச் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தனின் பங்களிப்பினை விபரிக்குக.

ம.ப.பா

05. பின்வருவோருள் யாரேனும் ஒருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) கம்பர்
(ஆ) உமறுப் புலவர்
(இ) பாரதியார்
(ஈ) மு.வரதராசன்

## பகுதி II

06. "இலக்கியவாதிக்கும், வாசகனுக்கும் இடையே சிறந்த ஒரு பாலமாகவும், வழிகாட்டியாகவும் விளங்குபவன் திறனாய்வாளனே" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

07. சிறந்த திறனாய்வு எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிக் கருத்துரை வழங்குக.

08. இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளில் அறவியல் கொள்கையையும், சமுதாயவியல் கொள்கையையும் ஒப்பிட்டு விளக்குக.

09. நீர் அண்மையில் படித்த சிறுகதைத் தொகுதி ஒன்றினைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுக.

10. பின்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்;
வயதுபதி னாறிருக்கும்; இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்!
துங்கமணி மின்போலும்வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
ஆங்கதனிற் கண்விழித்தேன், அடடாவோ, அடடா!
அழகென்னுந் தெய்வந்தான் அதுவென்றே
யறிந்தேன்.

ம.ப.பா

யோகந்தான் சிறந்ததுவோ தவம்பெரிதோ என்றேன்
யோகமே தவம்தவமே யோகமென வுரைத்தாள்
ஏகமோ பொருளன்றி இரண்டாமோ என்றேன்
இரண்டுமாம் ஒன்றுமாம் யாவுமாம் என்றாள்

தாகமறிந் தீயுமருள் வான்மழைக்கே யுண்டோ?
தாகத்தின் துயர்மழைதா னறிந்திடுமோ வென்றேன்.
வேகமுடன் அன்பினையே வெளிப்படுத்தா மழைதான்
விருப்புடனே பெய்குதோ வேறாமோ என்றாள்

காலத்தின் விதிமதியைக் கடந்திடுமோ என்றேன்
காலமே மதியினுக்கோர் கருவியா மென்றாள்
ஞாலத்தில் விரும்பியது நண்ணுமோ என்றேன்
நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலா மென்றாள்
ஏலத்தில் விடுவதுண்டோ எண்ணத்தை யென்றேன்
எண்ணினால் எண்ணியது நண்ணுங்கா ணென்றாள்
மூலத்தைச் சொல்லவோ வேண்டாமே என்றேன்
முகத்திலருள் காட்டினாள் மோகமது தீர்ந்தேன்